Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, KARUR

C.C. No. 48/2020

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : இளங்கோவன்

Father's Name : பொன்னன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 19.08.2026.

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி

ஆய்வாளர் பிரபாகரன், என்பவருடன் பணிபுரிந்த வகையில் அவருடைய கையொப்பம் எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.10.2019 ம் தேதி கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் பிரபாகரன் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய கு.எண்.700/19, ச.பி.387, 506(2) இதசவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **கணேசன் கொடுத்த புகார் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சி கந்தசாமி, வீரமணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர், மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், சாட்சிகள் கணேசன், சரவணன், கந்தசாமி, வீரமணி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது கரூர் லைட்ஹவுஸ்கார்கனர் பஸ்டாப் அருகில் நின்றிருந்த எதிரி சூர்யாவை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கணேசன்,

குணசேகரன் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கணேசன் என்பவரை மிரட்ட பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை மேற்கண்ட சாட்சிகள் கணேசன், குணசேகரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார்.

3. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான " **நான் கணேசனை மிரட்ட பயன்படுத்திய கத்தியை எனது இடுப்பில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்னை அழைத்து சென்றால் சம்பவ இடத்தை அடையாளம் காட்டுகிறேன். " என்கிற அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கணேசன், குணசேகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் உதவி ஆய்வாளர் பிரபாகரன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரைப் பெற்று எதிரி மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகசர், வரைபடம், கைப்பற்றுதல் மகசர் போன்ற ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றாலும், எதிரியை சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**